1979 மார்ச் 16] [திரு. ச. இராமச்சந்திரன்]

திற்குரிய பிரச்சினையாக இருக்கிறது என்று சொல்லுகிறபோது உண்மையிலேயே இந்தப் பிரச்சினையிலே எவ்வளவு கவனம் செலுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம் என்பதையும் அந்த அளவிற்கு இந்தத் தீர்மானம் இந்த அவைக்கு பயன் பட்டது என்பதையும் கூறி இந்தப் பிரச்சினை குறித்து அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டியது இல்லை என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

(4) கவன ஈர்ப்புகள்.

(அ) அரியலூர் கலைக் கல்லூரியினரும் மாணவர்களும் சமூக விரோதிகளால் தாக்கப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். ஜெபமணி, பொ. விஜய ராகவன், டி. ஆறுமுகம் ஆகியோர்கள் அவசரப் பொதுமுக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பொ. விஜயராகவன் அவர்கள் இதனை முன் மொழிவார்கள்.

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவரவர்களே, "சமூக விரோதிகளால் அரியலூர் கலைக் கல்லூரி மாணவர் பேரவைத் தலைவரும், மாணவர்களும் தாக்கப்பட்டும், கல்லூரி முதல்வர் மிரட்டப்பட்டும் உள்ளதால், கல்லூரி செயல்பட முடியாமல் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த', அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவ வரவர்களே,

இது குறித்துக் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து ஒரு அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கையிலிருந்து அறியப் படுவதாவது :—கடந்த 2—3—1979 அன்று பிற்பகல் 3 மணி அளவில் மாணவர்கள் இருவராலும் வெளியார் ஒருவராலும்

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 16

இக்கல்லூரி மாணவப் பேரவைத் தலைவர் தாக்கப்பட்டார். இச் சம்பவம் குறித்து ஆய்ந்தறிய ஆசிரியர் குழு ஒன்று நியமிக்கப் பட்டது. இக்குழுவின் புலனாய்வின் முடிவில், தாக்கிய இரு மாணவர்களும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டுள்ளனர். கல்லூரி மாணவத் தலைவர் இம்முடிவிற்கு இணங்கியுள்ளார்.

. இசசம்பவத்தில் ஈடுபட்ட வெளிநபர் குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கக் கல்லூரியால் இயலாததால் காவல்துறைக் குப் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இப்புகார் குறித்துக் காவல் துறை அலுவலர்கள் ஆய்ந்து வருகின்றனர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. பொ. விஜயராகவன் : இந்தக் கல்லூரி மாணவர் தலைவரை வெளியார் தாக்கியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள்மீது காவல் துறையினரிடம் புகார் கொடுத்திருப்பதாகவும் சொன்னார்கள். அப்படிக் கொடுத்த புகார் மீது காவல் துறையினர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதற்கு ஏதாவது தகவல் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதை ஆய்த்து வருவதாக தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. த. ஆறுமுகம் : அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி மாணவர் தலைவர் ராஜேந்திரனைத் தாக்கியவர்கள் வெளியார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வெளியார் ஆளும் கட்சியைச் சார்ந்தவர். ஆகவே அங்குள்ள காவல் துறை அதிகாரிகள் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அரசாங்கம் அவரை உடனடி யாக கைது செய்து அவருக்கு தண்டனை கொடுக்க முன் வருமா என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். காவல் துறைக்கு புகார் தரப்பட்டு அந்தப் புகார்மீது காவல்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்றுதான் பதில் கூறினேன்.

(ஆ) கிழக்கு இராமநாதபுரம், உள்ளாட்சித் துறை பணி யாளர்களுக்கு 'அடடா' வழங்காமல் இருப்பது குறித்து.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, "புயலால் பாதிக்கப்பட்ட கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 'அடடா' வழங்கியும், உள்ளாட்சித் துறைப் பணியாளர்களுக்கு வழங்காமலும் இருப்பதால், அவர்கள்